பளியரின் வரலாற்று மருத்துவம்
பாகம் 2

ஆதிகாலத்தில் வாழ்ந்த என்னுடைய பழங்குடி பளியர் இன மக்கள் வெளி உலகத்தோடு எந்த ஒரு தொடர்பும் இல்லாமல் அவர்கள் காட்டிற்குள் வாழ்ந்து வந்தார்கள் வெளி உலக தொடர்பையும் அவர்கள் விரும்பவில்லை. அக்காலத்தில் அம்மா பச்சை என்று சொல்லக்கூடிய அம்மை தடுப்பு ஊசி மற்றும் பல வேலைகளுக்காக வெளி ஆட்கள் தங்களுடன் தொடர்பை கொள்ளும் பொழுது அவர்களுடைய தொடர்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஊசியை போட்டால் ஏதாவது உயிருக்கு பாதிப்பு ஏற்படும் என்று அவர்கள் எண்ணி பயந்து அவர்கள் அந்த அம்மை ஊசியினை போட மாட்டார்கள். மேலும் ஏதாவது தங்களுக்கு உடலுக்கு நோய்கள் வரும் பொழுது அவர்கள் மருத்துவமனைக்கு செல்வதையும் விரும்ப மாட்டார்கள். இயற்கையாக காட்டிலேயே கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான மருத்துவ மூலிகைகளை பயன்படுத்தி தங்களுக்கு ஏற்படும் நோய்களை மருத்துவமனைக்கு செல்லாமலே தாங்களே இயற்கையான மருத்துவத்தின் மூலமாக தங்களை பாதுகாத்துக் கொண்டனர்.



வாழைமரம்

அதிகாலத்தில் வாழ்ந்த பழங்குடி பலியரின மக்கள் பயன்படுத்தி வந்த பல்வேறு வகையான முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவ மூலிகைகளை பற்றிய தகவல்களும் மூலிகை மருந்துகளும் அழிந்து கொண்டே வருகின்றன இதற்கு காரணம் வரலாற்று குறிப்புகள் எதுவும் இல்லாததும் பளியர் பழங்குடி மக்களில் மருத்துவம் தெரிந்த வயதானவர் தங்களுக்கு தெரிந்த மருத்துவ மூலிகையை பற்றிய அதை எப்படி பயன்படுத்துவது என்று அடுத்த தலைமுறைக்கு கற்றுக் கொடுக்காததும் ஒரு காரணமாக அமைகிறது.

பழங்குடி பளியரின மக்களுடைய மருத்துவம் அழிந்ததற்கு முக்கிய காரணம் என்னவென்று பார்த்தால் பழங்குடி பளியரின மக்கள் காடுகளில் இருக்கும் பொழுது அனைத்து மருத்துவ மூலிகைகளும் காடுகளிலே கிடைத்தது அந்த மூலிகைகளை அவர்கள் அடிக்கடி பயன்படுத்தி வந்தனர் பின்னர் காடுகளில் இருந்து அவர்கள் வெளியேற்ற பட்டனர் அவ்வாறு அவர்கள் காடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட காரணத்தினால் மருத்துவ மூலிகைகள் அவர்களுக்கு சரியாக கிடைக்கவில்லை. மேலும் மருத்துவ மூலிகைகள் சரியாக கிடைக்காத காரணத்தினால் மருத்துவ மூலிகைகளின் பயன்பாடு குறைந்து கொண்டே வந்தது காடுகளில் இருந்து

பழங்குடியின மக்கள் வெளியேற்றப்பட்டதே மருத்துவ மூலிகைகளின் அழிவிற்கு ஒரு மிக முக்கிய காரணமாக அமைகின்றது.

காடுகளில் வாழ்ந்த பொழுது என்னுடைய பளியர் பழங்குடியின மக்கள் தங்களின் உயிர்களை பாதுகாத்துக் கொள்ள பயன்படுத்தி வந்த சில வரலாற்று மருத்துவ மூலிகைகளை பற்றி நாம் அனைவரும் தெரிந்து கொள்வோம்.

பழங்குடி பளியரின மக்களுடைய வரலாற்று மருத்துவத்தில் ஒன்றுதான் இந்த சேமங்கீரை இந்த சேமங்கீரையில் இரண்டு வகைகள் உள்ளன ஒன்று வெள்ளை செமங்கீரை மற்றொன்று கருஞ்செமங்கீரை இந்த இரண்டு கீரைகளையுமே என்னுடைய பளியரின மக்கள் சாப்பிடுவார்கள். இந்த இரண்டு கீரைகளுமே எந்த மருத்துவத்திற்கு பயன்படுகிறது என்று நாம் பார்க்கும் பொழுது மூல நோய் உள்ளவர்கள் இந்த சேமங்கீரையை சாப்பிட்டு வரும்பொழுது அவர்களுடைய மூலநோய் முற்றிலும் குணமடைகிறது. மேலும் வாழை மரத்தை பற்றி நம் அனைவருக்குமே நன்றாகவே தெரியும் வாழை மரத்தில் உள்ள அனைத்து பாகங்களுமே நம் சாப்பிடக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இந்த வாழை மரத்தில் உள்ள வாழைப்பூ மற்றும் வாழைத்தண்டை நம் சாப்பிட்டு வந்தால் கல்லடைப்புக்கு ஒரு மிகச் சிறந்த மருந்தாக என்னுடைய பளியரின மக்கள் பயன்படுத்தி வந்தார்கள்.



விராலி இலை

அடுத்தபடியாக அவர்களுடைய மற்றொரு மூலிகை என்னவென்று பார்த்தால் விராலி இலை இந்த விராலி இலையானது தலைவலி மற்றும் கைகள் குடைச்சலுக்கு ஒரு மிகச்சிறந்த மூலிகையாக என்னுடைய மக்கள் பயன்படுத்தி வந்தார்கள். மேலும் நெருப்புகளை போடும்பொழுது அவற்றில் கிடைக்கும் சாம்பல்களை எடுத்து தலைவலி உள்ளவர்கள் தலையில் போட்டு வந்தால் தலைவலி முற்றிலுமாக குணமடைகிறது. மேலும் கற்றாழை என்று சொல்லக்கூடிய ஒருவகை மூலிகை இருக்கின்றது இந்த கற்றாழையை உடல் சூட்டை தணிக்க ஒரு மிகச் சிறந்த மருந்தாக என்னுடைய மக்கள்



கற்றாழை

பயன்படுத்தினார்கள். அடுத்தபடியாக காடுகளில் உள்ள தலைநார் என்று சொல்லக்கூடிய ஒரு வகை மரம் இருக்கின்றது அந்த மரத்தில் உள்ள பட்டைகளை எடுத்து தலையில் தேய்க்கும் பொழுது நுறையாக வரும் அந்த பட்டையை தேய்த்து தான் அதிகாலத்தில் வாழ்ந்த பழங்குடி பளியரினமக்கள் குளித்து வந்தார்கள். அவ்வாறு அவர்கள் குளித்து வரும்போது அவர்களுடைய முடி கருமை நிறமாகவும் பேன் பொடுகு போன்ற எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் இருக்க இவற்றை என்னுடைய பளியரின மக்கள் பயன்படுத்தி வந்தனர்.



சாம்பல்

இவ்வாறாக என்னுடைய அதிகாலத்தில் வாழ்ந்த பழங்குடி பளியரின மக்கள் பயன்படுத்தி வந்த மருத்துவ மூலிகைகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம் அவற்றில் சில மூலிகைகளை பற்றி தான் நான் கூறியிருக்கிறேன்

மேலும் பல்வேறு வகையான மூலிகைகள் இருக்கின்றன.இவ்வாறு என்னுடைய பளியரின இன மக்கள் அதிகாலத்தில் காடுகளில் கிடைக்கக்கூடிய இந்த வரலாற்று மருத்துவ மூலிகைகளை பயன்படுத்தி தங்களுடைய உயிர்களை பாதுகாத்து வந்தனர் ஆனால் இப்போது இருக்கும் காலகட்டத்தில் இந்த மருத்துவ மூலிகை ஆனது அழிந்து கொண்டே வருகிறது இந்த பளியரின மக்கள் பயன்படுத்தி வந்த இந்த மருத்துவ மூலிகைகளை பாதுகாக்க வேண்டும் அவ்வாறு பாதுகாத்து வந்தால் மனித உயிர்கள் பல பாதுகாப்பாக நோய் நொடி இல்லாமல் இருக்கும்.

நன்றி....